

புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

ஸ்தாபிதம் (1889)
[illegible]

இந்துசாதனம்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா: ,,	ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி: ,,	ரூ. 9-40
தனிப்பிரதி:	சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதல் முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு அவ்விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௬. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ புரட்டாதி௴ ௧௪௳; (1924 செப்டெம்பர் 29) திங்கட்கிழமை. } இலக்கம்—௨௫.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தேக்க மரம்.

ரங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொம்பனியாரிடமிருந்து புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானாற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கி வளவிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தந்திவிலாசம்:— தொண்டமானாறு.
றாபி. வல்லுவெட்டித்துறை. (H. 29.)

[ESTABLISHED 1909].

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவதனையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது
உத்திரவாதமுள்ளது.

சித்தஜானந்த சிட்டிக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடிய அமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஒடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனதியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய

அரைக்கீரை விரைத் தைலம்.

இதன் குணம்.

பித்த மேகநீராளை சிரசுக்கேறி அதனாற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி. ஜன்மவருஷத்திற் குட்டைபட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் நீக்கி அனுகூலப்படுத்தும் மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்துஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பார்சல் போஸ்டேஜ் பிரத்தியேகம் வெளிநாடுகளுக்கு வி. பி. இல்லாததால் முற்பணம் அனுப்பவேண்டும்.

வி: எஸ் கோமளத்தம்மாள்,
மானியுபாக்சரர்,
(Y 26) 8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

---

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
தமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது

அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண்காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முன்டு. குணம இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.

உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும், 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியம் தீரும்; வெட்டை, மூத்திர மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நமைச்சல், மேகவூரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6 திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுந்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 கிரணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, அக்கிமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, அழுகுபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கைவலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
R. M. K. வேலுசாமிபிள்ளை,
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.
(Y. 31.)

பிரகடனம்.

ஸீனியர் வகுப்புக்குரியவை 1924.

நிரைமீட்சிச்சருக்கம்: வில்லிபுத்தூரர் பாரதத்துள்ள இச்சருக்கம் பதவுரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்பு, நூலாசிரியர் வரலாறு, கதைச் சுருக்கம் முதலியவற்றுடன் விலை சதம் 75. (அஞ 12.)

திருக்குறள் முதற்பத்ததிகாரம்: இப்பத்ததிகாரங்களும் தெளிபொருள்விளக்கப் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, திருவள்ளுவர் சரித்திரச் சுருக்கம் என்னுமிவற்றோடு விலை சதம் 50. (அஞ 8)

பெண்கல்வி: மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய இந்த அரிய வியாசம் திருத்தியும் புதுக்கியும் அரும்பதவிளக்கத்தோடு சுத்தப் பதிப்பாக வெளிவந்துள்ளது. பெண்கள்படிக்க வேண்டியது விலை சதம் 85 (அஞ 14)

ஜூனியர் வகுப்புக்குரியன. 1924.

நாலடியார் முதற் 15அதிகாரம்: இப்பதினைந்ததிகாரங்களும் பதவுரை, கருத்துரை, விசேடவுரை, இலக்கணக்குறிப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு என்னுமிவைகளுடன் விலை சதம் 75.

சிசுபாலசரித்திரம்: விலை சதம் 50 (அஞ 8)

மற்றும் நூல்கள்.

மயானகாண்டம்: ஆசுகவிராயர் இயற்றிய அரிச்சந்திரபுராணத்துள்ள இக்காண்டம் பொழிப்புரை, விசேடவுரை, சரித்திரக்குறிப்புமுதலியவற்றுடன் 2ம்பதிப்பு. தமிழ் 7ம் 8ம் வகுப்புகளிற் கல்விபயிலும் மாணாக்கருக்குச் செய்யுட்பாடமாக உபயோகிக்கப்படுவது. விலை சதம்50.

கதிரையாத்திரைவிளக்கம்: கதிர்காமயாத்திரை அனுபவத்தையும் கதிர்காமவேலவர் திருவருட் பெருமையையும் ரொண்டிச்சிந்து நடையிற் கூறுவது. ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் பாடிய கதிர்காமவேலவர்கீர்த்தனம், பரமானந்தப்புலவர் பாடிய நல்லைக் கந்தர் கீர்த்தனை, [illegible] முதலியவைகளுடன், விலைசதம்25.

சிவராத்திரிவிரதமான்மியம்: சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்கும் முறையையும் அனுட்டித்தோர் பெற்ற பேறுகளையும் பிறவற்றையும் வசனநடையிற் கூறுவது. தோத்திரப்பாக்களுடன் விலை சதம் 10. (அஞ 2.)

அதிகமாக வாங்குவோருக்குத் தகுந்த கழிவு கொடுக்கப்படும். ஒரு ரூபாவிற்குக் குறைந்த புத்தகம் V. P. மூலமாக அனுப்பப்படமாட்டா.

Apply to
Pandit V. T. SAMBANDHAN,
Jaffna Hindu College,
Vannarponnai.
(Q 50)

இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இரத்தாட்சி௵
புரட்டாதி௴ 14௳ திங்கட்கிழமை.

சனப் பிரதிநிதித் தெரிவு.

வடமாகாணத் தென்பிரிவு
மத்திய பிரிவுகளின் சனப் பிரதிநிதிகள்.

வடமாகாணத்துள்ள தென்பிரிவிற்குச் சட்ட நிருபண சபைச் சனப்பிரதிநிதியாக வருதற்குத்தனித்தனிமுற்பட்டுநின்றகௌரவ லோர் அ. கனகசபை ஸ்ரீ ஆ. கனகரத்தினம் மிஸ்டர் J. K. சண்முகம் என்னும் மூவருள் இலங்காபிமானிப் பத்திரிகாசிரியராகிய ஸ்ரீ ஆ. கனகரத்தினமவர்களே வடமாகாணத் தென்பிரிவுக் கௌரவ சனப்பிரதிநிதியாகக் கூடிய தொகையினர் சம்மதம் பெற்றுத் தெரிவுசெய்யப்படலாயினர். மத்திய பிரிவுக்குச் சனப்பிரதிநிதியாகத் தனித்தனி முற்பட்டு நின்ற நியாயதுரந்தரர் ஸ்ரீ சு. இராசரத்தினம் பரிஸ்ரர் ஸ்ரீ த. இராமநாதன் என்னுமிருவருள் ஸ்ரீ இராசரத்தினமவர்களே மத்தியபிரிவிற்குக் கௌரவ சனப்பிரதிநிதியாகக் கூடிய தொகையினர் சம்மதம் பெற்றுத் தெரிவுசெய்யப்படலாயினர். நேற்றைத்தினமே இவர்களுடைய தெரிவு வெளியிடப்பட்டது. இவ்விருபிரிவுகட்கும் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டகுறித்த இருவருடைய குணாதிசயங்களைப்பற்றியும் திறமைகளைப்பற்றியும் இப்பத்திரிகையிற் சென்றவாரம் வெளியிட்டுள்ளோமாதலின் ஈண்டு யாதுங் கூறாது விடுகின்றேம். இவர்கள் அனுகூலமடைந்தமையையிட்டு எமக்குண்டான மகிழ்ச்சியை அவர்கட்குத் தெரிவிக்கின்றேம்.

எதிரிகளின்றிய பிரதிநிதித்துவம்போலாது எதிரிகளையுடைய பிரதிநிதித்துவம் அளவற்ற சிரமப்பட்டும் அதிக பொருள் செலவிட்டும் பெறப்படுவது இயல்பாகும். அங்ஙனம் பெறப்படும் பிரதிநிதித்துவமே மெச்சப்படுவதாகும். பிரதிநிதிகளாக வருதற்கு முற்பட்டு நிற்பவர்கள் அங்ஙனம் முற்பட்டு நிற்குங் காலத்திலே சனங்களைப் பெரிதும் வேண்டி நடக்கின்றார்களென்றும் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டபின் "செல்வம் வந்துற்றபோது தெய்வமுஞ் சிறிதுபேணார், சொல்வன தெரிந்து சொல்லார்……" என்றபிரகாரம் சனங்களை அலட்சியஞ் செய்துவிடுகிறார்களென்றும் ஊரிலே பேசிக்கொள்ளுகிறார்கள். அதனைப் பிரதிநிதிகளாய் வருபவர்கள் தங்கள் காதாரவுங் கேட்டிருப்பார். "இல்லாதன இல்லை யிளங்குமரா" என்றாற்போல உண்மை சிறிதுமின்றி அப்படியான ஒரு வார்த்தை ஊரில் உலாவமாட்டாது. முந்திய அனுபவத்திற் கண்டுதான் ஊரவர்கள் அப்படிப் பேசிக்கொள்ளுகிறார்களென நினைக்கின்றேம். நமது புதிய பிரதிநிதிகள் இந்த அபவாதத்தை நிலைநிற்கவிடாது தங்களைத் தெரிவுசெய்தனுப்பிய சனங்களின் குறிப்பறிந்து அதற்கியைய உழைத்துவருவரெனக் காத்திருக்கின்றேம். எக்கருமத்தையும் ஊரவரின் எண்ணத்திற்குவிரோதமாகச் செய்யவொண்ணாது. கௌரவ ஸ்ரீ கனகரத்தினமவர்களும் கௌரவ ஸ்ரீ இராசரத்தினமவர்களும் ஊரவர்கள்பொருட்டுப் பெரிதும் உழைத்து அனுகூலமுற்றுச் சனங்களாற் பெரிதும் மெச்சப்படுவோர்களாக.

இலங்கையின் மற்றும் பிரதிநிதிகளைக் குறித்து அடுத்த பிரசரத்தில் வெளியிடுவேம்.

வித்தியாபகுதியாரைப் பிடித்த புதிய நோய்.

இந்த இலங்கையிலே அரசாங்க உத்தியோக பகுதிகளில் ஒழுங்கீனமுள்ளவையும் பெரிதும் அலட்சியஞ் செய்யப்படுவனவுமாய உத்தியோகப் பகுதிகள் இரண்டு உண்டு எனலாம். ஒன்று, இலங்கைப் புகையிரதப்பகுதி; மற்றது வித்தியாபகுதி. ஒரு நாட்டின் க்ஷேமலாபங்கள் பெரும்பான்மையும் அந்நாட்டிலுள்ளாரின் கல்வியபிவிருத்தியிலேயே தங்கியிருக்கின்றனவென்று சொல்லலாகும். சீர்திருந்தியவர்களெனவிருக்குஞ் சாதியாராற் பரிபாலிக்கப்படும் நாடுகளில் இக்காலத்திற் கல்வி அபிவிருத்தியடைந்துவர, நூற்றுமுப்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நாகரிகத்தில மேம்பட்ட ஆங்கிலராற் பரிபாலிக்கப்படும் இந்த இலங்கையில்மாத்திரம் கல்வி விருத்தியின்றி அபரபக்கச் சந்திரன்போற் குன்றிவரலாயிற்று. இவ்விஷயமாக இப்பத்திரிகையில் முன்னர்ப் பன்முறை எழுதப்பட்டிருத்தலின் ஈண்டு அவ்விஷயமாக விரித்துக் கூறாது விடுகின்றேம். நிற்க,

மாசத்துக்கு மாசம் வாரத்துக்கு வாரம் தினத்திற்குத் தினம் வித்தியாபகுதியாரிருந்து வித்தியாசாலை அதிபர்கட்கு ஒரேபோன்ற முறையும் விளம்பரங்கள் வந்தபடியே யிருக்கின்றனவென்று வித்தியாசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் முறையிடக் கேட்டிருக்கின்றேம். சைவ வித்தியாசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் சைவசமயிகள் சகலரும் வெறுக்கத்தக்க ஒரு நிருபம் இப்பொழுது வித்தியாகர்த்தரிடமிருந்து வெளிவந்திருக்கின்றது. அஃதென்னவெனில் சைவ வித்தியாசாலைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிற் பள்ளிக்கூடம் கூடவொண்ணாதென்பதாம். இந்த விஷயமாக வித்தியாபகுதியாருக்கும் யாழ்ப்பாணச் சைவப்பிரகாச வித்தியாசாலை கோப்பாய்ச் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னுமிவைகளின் அதிபராகிய ஸ்ரீமத். த. கைலாசபிள்ளையவர்கட்குமிடையே நிகழ்ந்த கடிதங்களை இங்கே மொழிபெயர்த்துத் தருகின்றும்:

பெருநாட் சுற்றுநிருபம்.
நெ. V. S. [6004/24
வித்தியாபகுதிக் காரியாலயம்
கொழும்பு 14 ஆக்கஸ்ட்௴ 1924.

யாழ்ப்பாணச் சைவப்பிரகாசவித்தியாசாலை
கோப்பாய்ச் சைவப்பிரகாச வித்தியாசாலை,
ஸ்ரீமத் த. கைலாசபிள்ளையவர்கட்கு:

ஐயா,

தங்கள் வித்தியாசாலைகளில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் பள்ளிக்கூடம் நடைபெறுவதாக யான அறிகின்றேன் என்பதை தங்கட்கு மிக்க விசனத்துடன் தெரிவிக்கின்றேன். இச்செயல் ஒழுங்குக்கு விரோதமானதாகும். ஆதலால் உடனே இதனை ஒழித்துவிடுதல்வேண்டும். ஞாயிற்றுக்கிழமைகளிற் பிள்ளைகள் சமுகமாயிருந்தாலும் அந்த நாள் கணக்கிற் சேர்க்கப்படாதென வித்தியாதரிசிக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒருவாரத்தில் இரு தினங்கட்குப் பள்ளிக்கூடம் நடக்கவொண்ணாதென ஒரு பொதுப் பிரமாணமுண்டு. இவற்றுள் ஒரு தினம் அமாவாசித் தினத்தையேனும் பூரணைத்தினத்தையேனும் கொள்ளலாம். மற்றத்தினம் ஞாயிற்றுக்கிழமையாகவேயிருத்தல்வேண்டும்.

இங்ஙனம்
தங்கள் கீழ்ப்படிவான
ஊழியன்
S. வேலாயுதன்.

இதற்கு ஸ்ரீமத். த. கைலாசபிள்ளையவர்கள் எழுதியனுப்பிய விடை:—

வண்ணார்பண்ணை
1924 ஆக்கஸ்ட்௴ 18௳.

சுதேசபாஷைப் பள்ளிக்கூடத்
தலைமை வித்தியாதரிசிக்கு:

ஐயா,

6004/24 என்னும் இலக்கத்தைக்கொண்ட ஆக்கஸ்ட்௴ 14௳ இடப்பட்டதங்கள்கடிதவிஷயமாக யான விசனத்தோடு தெரிவிப்பது யாதெனில் எனது வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆரம்பித்து 76 வருடங்களாயின. வடமாகாணத்தில் முதன்முதல் அரசினர் உதவிநன்கொடைப்பணம்பெறும் பள்ளிக்கூடமாகப் பதிவுசெய்யப்பெற்றது வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையேயாகும். கோப்பாய் வித்தியாசாலை முந்தி ஆரம்பிக்கப்பட்டதாயினும் இற்றைக்கு 25 வருடங்களுக்குமுன்பே அங்ஙனம் பதிவு செய்யப்பட்டது. இந்த இரண்டும் சுத்தசைவப்பள்ளிக்கூடங்களாகும். இத்தனைகாலமும் இவ்வித்தியாசாலைகளில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் பள்ளிக்கூடம் நடைபெற்றேவருகின்றது. இந்த வித்தியாசாலைகள் பதிவுசெய்யப்பட்ட காலத்திலே ஞாயிற்றுக்கிழமைகளிற் பள்ளிக்கூடம் வைக்கக்கூடாதென்ற ஒரு கொள்கை இருக்கவில்லை. இதுவரையில் யாராவது ஆட்சேபஞ் செய்ததுமில்லை. இப்படி மாறுதலுண்டாதற்கு நியாயமென்னவென்பது எனக்குப் புலப்படவில்லை. உமது கடிதத்தைக்கொண்டு ஞாயிற்றுக்கிழமையைப்பற்றி நீர் மிகவும் அவதானமாகவிருக்கின்றீர் என்பதுமாத்திரம் புலப்படுகின்றது.

ஒரு வாரத்தில் இரண்டு தினங்களாயினும் விடுதலை செய்யப்படுதல் வேண்டுமென்றும் அவைகளிலொன்று அமாவாசி பூரணைகளாயிருக்கலாமென்றும் மற்றது ஞாயிற்றுக் கிழமையாகவே யிருக்கவேண்டுமெனவும் பொதுப்பிரமாணமொன்றிருப்பதாகத் தங்கள் கடிதத்திற் கூறியிருக்கிறீர்கள். ஆனால் இந்தப்பிரமாணத்தை வித்தியாபகுதியாரின பிரமாணப்புத்தகத்தில் யான் காணவில்லை. இதனை வேறு எங்கே யான் பார்ப்பது? கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களிலேயே சனி ஞாயிற்றுக்கிழமைகள் விடுதலைநாட்களாக மதிக்கப்படுகின்றன. வித்தியாபகுதியார் சைவப்பள்ளிக்கூடங்களையும் கிறிஸ்துமயமாக்க நோக்கங்கொண்டிருப்பதுபோல் எனக்குப்புலப்படுகின்றது. இப்படிப்பட்ட விஷயங்களில் இந்தியாவில் என்ன நடக்கின்றதென்று பார்ப்பதே எங்களியல்பு. அங்கே ஞாயிற்றுக்கிழமைகளிலும் சைவ வித்தியாசாலைகள் நடத்தப்படுகின்றன;

இக்காலத்தில் வித்தியாசாலைகளின் சொந்தக்காரர்களா யிருக்கும் வித்தியாசாலை அதிபர்கட்குப் பள்ளிக்கூடத்தில்யாதாயினும் அதிகாரமுண்டென்பதாக வித்தியாபகுதியார் நினைப்பதில்லை. வித்தியாசாலை அதிபர்கள் தாம்படுஞ் சிரமத்தோடு பள்ளிக்கூடச்செலவிலும் ஒரு பாகத்தைத் தாமேபொறுத்து வருகின்றார்களே. பள்ளிக்கூட அதிபர்களே அதன சொந்தக்காரராயிருக்கின்றனர். அரசினர் அவ்வித்தியாசாலைகளுக்கு ஆணைசெலுத்தமாத்திரம் வந்தவராவர். ஆங்கிலராச்சியத்தில் வித்தியாசாலை அதிபர்களன்றி வேறுயார் வேதனமின்றி உழைப்பவர்கள்! இப்படி உழைக்கும் அதிபர்களின உரிமையையும் அபகரித்துக்கொள்வது எத்துணைப்பரிதாபமான காரியமாகும்! வித்தியாசாலை விஷயமாக யாதும் மாறுதல் ஏற்படுங்காலத்தில் வித்தியாசாலை அதிபர்களோடும் வித்தியாபகுதியார் யோசித்துக் கருமஞ் செய்தகாலம் போய்விட்டது.

சைவர்களுள் அநேகர்க்கு அமாவாசி பூரணைத்தினங்கள் விரதநாட்களாகும். சனிக்கிழமைகளில் அவர்கள் அப்பியங்கனஞ்செய்துகொள்வர். ஆனமையால் இந்த நாட்கள் விடுதலை நாட்களாகும். பூர்வீககிறிஸ்தவர்கட்குச் சனிக்கிழமை புண்ணியதினமாகவிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை அரசாங்கவிடுதலைநாளாக விருப்பதனால் அத்தினத்தில் வித்தியாதரிசிகள் வேலைசெய்யவொண்ணாதென்ற ஆட்சேபம் கிளம்புதல்கூடும். ஆனால் வித்தியாதரிசிகளெல்லாரும் கிறிஸ்தசமயத்தைச் சேர்ந்தவர்களாகவிருந்தகாலத்திலும் ஞாயிற்றுக்கிழமைகளிற் சைவப்பள்ளிக்கூடம் வைக்கப்பட்டுவந்தது. அத்தினத்திலும் வேலைசெய்யும்படி அவர்கள் கேட்கப்பட்டபோது அவர்கள் சந்தோஷமாக வேலைசெய்துவந்தார்கள். இப்பொழுது நூதனமான கிறிஸ்தவர்கள் முளைக்கவில்லை. இக்காலத்தில் சைவசமயத்தைச்சார்ந்த வித்தியாதரிசிகள் பலர் இருக்கிறார்கள். இவர்களை ஞாயிற்றுக்கிழமைகளிற் பரீட்சிக்கும்படி கேட்கலாம். புகையிரதப்பகுதியிலும், பொலிஸ்பகுதியிலும் ஞாயிற்றுக்கிழமையில் வேலைசெய்கிறார்கள். வித்தியாசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் ஞாயிற்றுக்கிழமையில் வேலைசெய்யவொண்ணாதெனின் அவர்கள் கத்தார் முதலிய விடுதலைநாட்களிலும் வேலைசெய்யவொண்ணாதென்பது பெறப்படும். ஆதலால் தங்கள் பொதுப்பிரமாணம் எந்தப்பள்ளிக்கூடமும் அரசினர் விடுதலைநாட்களில்வைத்து நடத்தப்படவொண்ணாதென்றே யிருத்தல்வேண்டும். எனவே அரசாங்கவிடுதலைநாட்களில் விவாகம் உற்சவம்முதலியனவும் நிகழவொண்ணாதென்ற நியாயம் பிறக்கும். ஏனெனில் இக்கொண்டாட்ட காலங்களில் யாதும் அடிபிடிசண்டை ஏற்பட்டால், விடுதலை நாளாகின் பொலிஸ்பகுதியாரும் தலைமைக்காரரும் கலகத்தை யடக்கும்படி ஆங்குச் சமுகஞ்செய்தல்சாத்தியமாகாது.

இங்ஙனமெல்லாமிருத்தலினால் இந்தப் புதிய பிரமாணத்தைத் தவிர்த்து முன்போல நடக்கும்படி செய்யக் கேட்கின்றேன். அஃது முடியாதாயின், எனது வித்தியாசாலைகளை வசதியாக நடத்துதற்கு வேண்டிய வேறு ஒழுங்குகளை நான செய்யவேண்டுமாதலின், வித்தியாதிகாரியிடமிருந்து விரைவில் மறுமொழிகிடைக்கச் செய்யும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
தங்கள் கீழ்ப்படிவான
ஊழியன்
த. கைலாசபிள்ளை.

இதற்கு வித்தியாபகுதியார் எழுதிய விடை வருமாறு:—

நெ V. S. 6164/24
கொழும்பு
செப்டெம்பர்௴ 1௳ 1924.

ஐயா, ஆகஸ்ட்௴ 18௳ தாங்கள் எழுதிய கடிதத்திற்கு விடையாக, குறித்த பிரமாணத்தை மாற்றுதல் அரசினரால் முடியாதென்பதைத் தங்களுக்கு விசனத்தோடு தெரிவிக்கின்றேன்.

இங்ஙனம்
தங்கள் கீழ்ப்படிவுள்ள
ஊழியன்
S. வேலாயுதன்.

இவைகளே இருபகுதியாருக்கு மிடையே நிகழ்ந்த கடிதப்போக்குவரவாகும். ஸ்ரீமத். கைலாசபிள்ளையவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளிற் பள்ளிக்கூடம் வைக்கவொண்ணாதென வித்தியாபகுதியார் பிரமாணஞ்செய்தமை முறையல்ல வென்பதற்குத்தக்க நியாயங்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றனர். அதற்கு வித்தியாபகுதியார் அது முடியாதெனச் சுருக்கமாக விடைகூறி விட்டனர். ஏன்முடியாது? இது முடியாதகாரியமாயிருந்தால் இத்தனைகாலமும் எங்ஙனம் முடிந்துவந்தது? சமயசம்பந்தமான விஷயங்களிற் பிரவேசிக்கும்போது அரசினர் மிகச்சாவதானமாகவன்றோ இருத்தல் வேண்டும். ஊரவர்களிடத்தில் அறவிட்ட பணத்தை அரசினர் வித்தியாவிருத்தியின்படி செலவிடும்போது ஊரவர்களின் சம்மதத்தையும் அனுசரித்தன்றோ செலவு செய்தல் வேண்டும். அந்தந்தச் சமயத்துப்பிள்ளைகட்கு அந்தந்தச் சமயத்துக்குரிய பாடங்களையல்லாது அந்நிய சமயப்பாடங்களை அப்பிள்ளைகளின் பெற்றாருடைய சம்மதமின்றிப் படிப்பிக்கவொண்ணாதென்பதுபோன்ற பிரமாணங்களெல்லாம் ஏற்பட்டிருக்கும் இக்காலத்திற் பாதிரிமார் செய்துவரும் கட்டுப்பாடுகளை அரசினர் சைவப்பள்ளிக்கூடங்களிலும் அனுசரித்தல் வேண்டுமென வற்புறுத்தி நிற்பதென்னே! அரசினரும் பாதிரிமாரும் ஒன்று என்றமௌட்டிகமான ஒரு எண்ணம் யாழ்ப்பாணத்தார்கட்கிடையே யிருந்தகாலமும் உண்டு ஆனால் அவைகளெல்லாம் இப்பொழுது மலையேறிவிட்டன. வித்தியாபகுதியார் கல்வி விஷயமாகச் செய்யவேண்டிய திருத்தங்கள் பலவுள. அவற்றைச் செய்யாமல் விடிந்தபோது சூரியன்குஞ்சைத் தேடிய மூடனைப்போற் செய்ய வேண்டியவற்றை விடுத்து இவ்வித்தியா பகுதியார் அடாத காரியங்களிற் பிரவேசித்தல் முறையாகாது. இந்தத் தவறான பிரமாணத்தை இவர்கள் மாற்றிக் கொள்ளாதொழிவரேல் புதிய சட்டநிரூபண சபையில் முதன்முதல் எடுத்தாளப்படும் விஷயம் இதுவாகவேயிருக்கும்.

ஏதுவருமோ அறிகிலேம்.

இந்தியாவிலுள்ள இந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் இடையிடையே நேரும் குழப்பங்களை ஒழித்தற்காக மகாத்மாகாந்தி இந்தச் செப்டெம்பர்௴ 18௳ தொடக்கம் இருபத்தொருநாள் உண்ணாவிரதம் அனுட்டிக்கின்றார். இந்த இருகட்சியாரையும் வேறுவழிகளாற் சமாதானப்படுத்தும் ஆற்றலில்லாமையினாலே தான் மகாத்மா உண்ணாவிரதம் அனுஷ்டிக்க வேண்டிவந்தது. மகாத்மாவின் உண்ணாவிரதமானது இந்தியாவிலுள்ள தேசத்தொண்டர்களையும் சனத்தலைவர்களையும் நடுநடுங்கச் செய்தது. சனத்தலைவர்களாகிய இந்துக்களும் மகமதியர்களும் தம்முள் சமாதானமாகும் பொருட்டுச் சென்ற செவ்வாய்க்கிழமை டில்லியில் வந்து கூடினர். மகாத்மாகாந்தி மிகவும் மெலிந்ததேகமுடையவர். அவர் 21 நாள் உண்ணாவிரதம் அனுட்டித்தலால் எவ்விதமான பேராபத்துநேருமோ என்று எல்லோரும் அச்சமுறுகின்றனர். மகாத்மாவை இவ் ஆபத்தினின்று காப்பதற்கும், இந்து மகமதிய ஒற்றுமையைப் பெலப்படுத்துவதற்கும் சனத்தலைவர்கள் தீவிரமாகமுயற்சிசெய்து வருகின்றனர். பஞ்சாப் டில்லி, லக்நோ, கல்கத்தா முதலான பல இடங்களிலுள்ள இந்திய மகமதிய தலைவர்கள் ஆங்காங்கு விசேஷ கூட்டங்களை நடத்தித் தம்முள் ஒற்றுமையை வளர்க்கின்றனர். மகாத்மா காந்தியின் உள்ளக்கிடக்கை பூரண சித்தி எய்தும் வண்ணம் திருவருள் முன்னிற்பதாக.

சமாசாரம்.

ஒரு புதிய தந்திக்கந்தோர்:—பண்டத்தரிப்புத் தபாற்கந்தோரைத் தந்திக்கந்தோராக அமைப்பதற்கேற்ற ஒழுங்குகள் நடைபெறுகின்றன. 1925-ம் வருட ஆரம்பத்தில் தந்திப் போக்குவரத்து நடைபெறும்.

தமிழ் ஆசிரியர் சங்கம்:—இச்சங்கத்தின் கூட்டம் ஒன்று புரட்டாதி௴ ௧௮௳ (4-10-24) சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணியளவில் வட்டுக்கோட்டைச் சைவாங்கிலவித்தியாசாலையில் நடைபெறும். அத்தருணம் வித்தியாதரிசி ஸ்ரீ எஸ். கந்தையா அவர்கள் அக்கிராசனம் வகிப்பர்.

ஒருவனை அக்கினிபற்றியது:—கொழும்பு வியாபார சமுதாயத்தாருடைய ஈயத்தொழிற்சாலையில் வேலைசெய்த கபிரியேல் என்னுமொருவன் நெருப்பினால் எரிந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டான்.

அம்பாந்தோட்டையிற் பருத்திச்செய்கை:- அம்பாந்தோட்டையிலே பருத்திச் செய்கை நடத்துவதற்காக அரசினர் 200 ஏக்கர் நிலத்தைக் கொடுத்திருக்கின்றனர்.

ஒருவன் புலிகடித்து மாண்டான்:—குருநாக்கலைச் சேர்ந்த கப்புக்கொல்லா என்னும் கிராமத்திலுள்ள புத்தபாஞ்சாலையிலே சில புத்தர்கள் வணக்கஞ்செய்து கொண்டிருந்தபொழுது ஒரு புலி உட்பிரவேசித்து நன்காமிஎன்னுமொருவனைக் கழுத்திற் கடித்து இழுத்துக்கொண்டு ஓடினது. நன்காமியின் கூக்குரல் கேட்ட பலர் ஓடிச்சென்று இருப்புப் பாரைகொண்டு புலியைத் தாக்குதலும், புலி நன்காமியைவிட்டு ஓடத் தொடங்கியது. அப்பொழுது வேறொருவன் துவக்கினாற் சுட்டான். சூடுண்ட அப்புலி தன் எதிரிற் சந்தித்த பத்துவயசுச் சிறுமியைப் பாய்ந்து பிடித்தபின் கீழே விழுந்து மாண்டது. நன்காமி என்பவன் மறுநாள் இறந்துபோனான்.

வேலைதேடிப்போன இடத்தில் நேர்ந்த விபத்து:—சென்றவாரம் மகம்மதுகாசிம என்னும் ஒருவன் குருநாக்கலிலுள்ள ஒரு தோட்டத்தினுட் பிரவேசித்து அங்குள்ள ஓவசியரிடம் தனக்கு ஏதும் வேலைகொடுக்கும்படி கேட்டான். அவன் வாயிற்காவற்காரனுடைய உத்தாரமில்லாமல் உள்ளே சென்றதற்காக ஓவசியர் கடுங்கோபமுற்று, அவனை அடித்து வெளியே தள்ளும்படி தன்கீழுள்ள கூலிபாட்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் அவனைக் கடுங்காயமுற அடித்து ஒரு கானுக்குள் விழ்த்திவிட்டார்கள். அவன் அந்தக் கானுக்குள் ஒன்றரைநாள் உணர்ச்சியின்றிக் கிடந்தான். குருநாக்கற் பொலிஸ் நீதிபதி அவனிடம் மரணவாக்குமூலம் கேட்டனர்.

நோயாளி வைத்தியஞ் செய்தவரைச் சருவினன்:—குருநாக்கலைச் சேர்ந்த அனுககவெலா என்னுமிடத்திலுள்ள சிறிப்பலா என்னும் ஒருவன் இந்தச் செப்டெம்பர் மாசம் 14-ந் திகதி தனது தொண்டையினுள்ளே ஏதோ உணவுப்பொருள் தடைப்பட்டிருக்கிறதென்றும் அயல் வீட்டிலுள்ள தன் சிநேகிதனை அழைத்துவரும்படியும் தன் மனைவியிடங் கூறினன். மனைவி அயலவனிடம் விஷயத்தைக் கூற அவன் அங்கு வந்து சிறிப்பலா என்பவனுடைய தொண்டைக்குள் ளிருக்கும் பொருளை உள்ளே தள்ளும் பொருட்டு ஒரு சிறிய தடியை அவனுடைய வாய்க்குள் செலுத்தினன். நோயாளி வருத்தஞ் சகிக்க முடியாமல் தன்னிடமிருந்த கத்தியை எடுத்து வைத்தியம் செய்தவரின் கழுத்திலும் மார்பிலும் காயப்படுத்திவிட்டான்.

ஓர் பயங்கரமான முதலை:—ஹிக்கடுவை என்றவூரிலுள்ள குளத்தில்ஒருமுதலை இரண்டு மனிதரையும், அநேக மாடுகளையும் கொன்று தின்று வந்தது. அவ்வூரிலுள்ள ஜனங்களுக்கும் திகிலாயிருந்தது. இந்த முதலையைக் கொல்லுவதற்கு பல முறை எத்தனித்தும் பயன்படாது போயிற்று. சில மீன்பிடிகாரர் தாங்கள் பிடித்த மீனைக் கவனியாமல், தங்கள் வேலையிற் கவனம் செலுத்தியிருந்தார்கள். சிறிது நேரம் சென்று பிடித்துவைத்திருந்த மீனைப்பார்க்க, அவை மாயமாய் மறைந்துவிட்டன. மீன்பிடிகாரருக்கு உண்மை விளங்கிக்கொண்டது. முதலையின் வேலையென்றறிந்து அதைப் பிடிப்பதற்கு, தங்களிடமுள்ள கயிறுகளைக் கொண்டு சில கண்ணிகள் செய்து ஆங்காங்கு வைத்துவிட்டுத் திரும்பினர்; மறுநாட் காலையிற் போய்ப் பார்க்க முற்கூறிய முதலை அகப்பட்டுத், தப்பி ஓடுவதற்கு எத்தனித்துக் கொண்டிருந்தது. அதற்குள், ஜனங்கள் வந்து அதைக் கரைக்கு இழுத்துச் சென்றனர்.

பூகம்பம்:—சிலதினங்களுக்குமுன் ஏற்பட்ட பூகம்பத்தால் சின்ன ஆசியாவில் எர்சொதனை அடுத்த அராஸ் நதிதீரத்தில் உள்ள 49 கிராமங்களில் 37 கிராமங்கள் அழிந்து போயின. உயிர்ச்சேதம் அதிகம்.

சிம்லாவில் இந்து மகமதிய கலகம்:—ஜகான்பூரிலேயுள்ள இந்துக்களுக்கும் மகமதியருக்கும் இடையிலே சென்ற 25-ந் திகதி பெருங் கலகம் நடைபெற்றது. மகமதியர் அங்குள்ள புகைரதஸ்தானத்திற்குச் சென்று அநேக இந்துக்களையும், புகைரத மார்க்கமாகப் பிரயாணஞ் செய்யச் சென்ற ஒரு சுதேச மகாராசாவையும் தாக்கினர். கலகத்தை அடக்கும்பொருட்டுச் சென்ற ஒரு அதிகாரியைப் பெரிதும் சருவினர். அவருடைய மோட்டர் இரதம் சேதமுற்றது. ஒன்பதுபேர் கொல்லப்பட்டனர். நூறு பேர்காயப்பட்டனர்.

கடிதம்.

சற்போதமஞ்சரி தீவினைத்திரட்டு.

சாகர முடுத்த தரணியின் மீது
வைகுறு மாடவர் மகளிர் யாவர்க்கும்
இம்மை மறுமை யிரண்டினு மவர்க்கு
இன்பதுன் பங்களை யீவது யாதெனின்
நன்மையுந் தீமையு மென்று நவில்வரே
அவ்விரண் டினிற்றீ யொழுக்கமானது
உடம்பின் நிழல்போ லுறுத்திய ஒருவனை
விட்டுப் பிரியா தெங்குமே விடினுஞ்
சொல்லுதற் கரிய துன்பம் யாவையும்
அளித்தெஞ் ஞான்று மனுபவிக் கச்செயும்
அத்தீ யொழுக்க மவற்றுட் சிலதை
அறைகுவன் மாந்தர் அவைவருங் கேண்மின்
அகில சராசரம் யாவையும் படைத்துக்
காத்தழிக் கின்ற கடவுளொன் றொருபொருள்
இல்லையென் றஞ்சா தெடுத்துரைத் திடுதலும்
அரனடி தொழாமல் அன்னம் அருந்தலும்
மாதா பிதாக்குரு மாமன் தமையன்
இவர்களை வழிபடா திருத்தலு மவர்கள்
கூறிடு சொல்லை மீறி நடத்தலும்
அன்னை தந்தையர்பசி யிருக்க அருந்தலும்
விருந்து புறத்தி லிருக்க மிசைதலும்
சிவத்திர வியத்தைத் திண்டிக் கவர்தலும்
தருமப் பொருளைத் தானெடுத் துண்ணலும்
அந்தியர்க் குற்ற அரும்பொருள் கல்வி
வாழ்வினைக் கண்டு மனங்கொதித் திடுதலும்
சீவகா ருண்ணியஞ் சிறிதுமில் லாமல்
உற்றபல் லுயிரை வதைத்துண் ணுதலும்
பசுரும் பதிபசு பாசமென் றறிஞர்
கூறும்முப் பொருளையுங் கொள்ளா தெல்லாம்
பிரமமென் றுரைத்துப் பெரும்பவம் புரிதலும்
அடைக்கலம் வைத்த பொருளப கரித்தலும்
தருகிறே னென்று சம்மதித் துரைத்துப்
பலநாள் அலைத்து இலையென மறுக்கலும்
கொடுப்பவர் தம்மை விலக்கிடு கொடுமையும்
நாவிலந் தொருவர்செய் நன்றியை மறத்தலும்
அட்டாங் கெனத் துணைபுரிந் திடுதலும்
சிநேகஞ் செய்து திரும்பவஞ் சித்தலும்
கற்றோர் முதியரைக் கண்டெழா திருத்தலும்
இரவில் நல்லோருக் கிடமில்லை யென்றலும்
போகவிட் டொருவரைப் புறங்கூ றுதலும்
பாவ வழியிற் பணத்தை யீட்டுதலும்
ஞாதியர் வருந்த கலனுறு வாழ்தலும்
கற்புடை மனைவியைக் கைவிட் டிடுதலும்
பிறவில் லாளைப் பெட்பொடு சேர்தலும்
விலைமகள் தோளை விரும்பிக் கலத்தலும்
மித்திர பேதஞ் செய்திரு வோர்தம்
மீதுறு மன்பைப் பிரித்து விடுதலும்
தம்மின் மெலியார் தம்மை வருத்தலும்
தாழ்ந்தசா தியரைத் தண்டித் திடுதலும்
சீர்நாக் காது சிநேகங் கோடலும்
அன்புள போது அடைந்தசம் பவத்தைப்
பிரிவுற்ற போது பிறருக் குரைத்தலும்
பொய்புகு குரைத்துப் பொழுதுபோக் கிடுதலும்
அயலார் பொருளை அபகரித் திடுதலும்
தெள்ளவைக் குறையுளாய்ச் சாருங் குடிநீர்
அல்லும் பகலும் ஆடிக் கெடுதலும்
மதியை மயக்கும் மதுபா னங்களை
அருந்தி யெஞ்ஞான்றும் அலமந் துழல்தலும்
உச்சிட் டத்தைவேட் டோடு நமலிபோல்
பிறன்மனை மீது பிரியமுற் றுழல்தலும்
களித்த மக்களை அட்டயி லுதல்போல்
ஆடுகோ ழிகளை அறுத்தருந் துதலும்
அடைக்கலம் புகுந்த அநாதர்க ளடங்களை
ஆதரி யாமல் அகற்றி விடுதலும்
பொய்க்கரி கூறலும் பொய்வழக் காடலும்
அடுத்த ஏழைகளை அனுப்பிக் கெடுத்தலும்
வணங்கிய கடவுளை மறுசம யத்திற்
புகுந்தவன் நிகழும் புல்லிய குணமும்
மோக்ஷம் நரகம் இலையென மொழிதலும்
கடவு ளிருந்தாற் காட்டெனச் செப்பலும்
கூபங் கேணி குளங்களைத் தூர்த்தலும்
சத்திரஞ் சாவடி தம்மைத் தகர்த்தலும்
வனப்புள நந்தா வனத்தை யழித்தலும்
சத்துரு மிடியுறு தருணம் வருத்தலும்
எதிலான் இல்லில் எரியூட் டுதலும்
கன்னியர் தங்கள் கற்பினை யழித்தலும்
நாணமும் ரோசமு மின்றி நடத்தலும்
பிறர்தம் வசைகளைப் பேசி நகைத்தலும்
கடுவட்டி வாங்கிக் காசைப் பெருக்கலும்
வாங்கிய கடனை இலையென மறுத்தலும்
அன்புறப் பேசி அடுத்துக் கெடுத்தலும்
உண்ட வீட்டுக் கிரண்டகஞ் செய்தலும்
வம்பர்தம் மொழிசக வஞ்சஞ் செய்தலும்
பெரியோர் தம்மனம் எரியநிந் தித்தலும்
வாய்ஞானம் பேசி பவித்ரரை ஏய்த்தலும்
தருமப் பொருளைத் தானு பவித்தலும்
தேவத் திரவியந் தின்றுவாழ்ந் திடுதலும்
வேதாக மங்களை வீண்வாக் கென்னலும்
கோளபல சொல்லிக் குடியைக் கெடுத்தலும்
எடுத்த கோன்புகளை இடையில் விடுதலும்
மனதினி லொன்றை வைத்துப் பேசலும்
கோபமே முகத்திற் குடிகொண் டிடுதலும்
ஆவை அடித்தலும் அதனமடி அறுத்தலும்
கன்றுக்கு விடாமற் பாலைக் கறத்தலும்
கருப்பஞ் சிதைத்தலுங் கடுவினை யூட்டலும்
சாதுவை வெருளலும் மாதரை வருத்தலும்
வஸ்திரம் நெகிழ்த்திடு வனிதையைப் பார்த்தலும்
ஒன்றும் உதவா உலோபியா யிருத்தலும்
தன்னைப் புகழ்தலும் சுடுமொழி சாற்றலும்
கைமையோ டிணங்கலுங் கயவரைப் புகழ்தலும்
பெண்களை விற்றலும் பிறரைப் பகைத்தலும்
நடுநிலை தவறி நியாயந் தீர்த்தலும்
பிறருக் கநேக புத்தியைப் புகட்டித்
தானவ் வழியில் நடக்கத் தவறலும்
தம்மைப் போற்பிறர் தமக்கிரங் காமையும்
ஆலயங் களிலநா சாரஞ் செய்தலும்
தண்ணீர்ப் பந்தலை யள்ளாது தடுத்தலும்
அபலவன் காணியை அபகரித் திடுதலும்
பந்தி வஞ்சகம் பண்ணி அருந்தலும்
அடமாயக் கள்ளப் படிவைத் தளத்தலும்
குடும்ப தோஷம் எடுத்துக் கூறலும்
தமக்கை தமையன் பாரிபெண் கொடுத்த
மாமி குருவின் மனைவி யிவர்களை
மாதா வாக வழிபடா திருத்தலும்
தம்பியி னில்லாள் தனையன் மனைவி
இவர்களை மகளா யெண்ணா திடுதலும்
உண்மையை யாராய்ந் தறியா தொருவனை
அபராதி யென்று அவமா யிசழ்தலும்
சேவல் ஆடுகளயர் செய்ய விடுத்தலும்
இவைமுத லாகிய பவங்களை யிகந்து
வாய்மை தூய்மை மனவடக் கம்பொறை
அறந்தவ மோம்பி அல்லும் பகலும்
மங்கை பாகன் மலரடி யிறைஞ்சிப்
புகலருங் கயிலை புக்குவாழ் குதிரே.

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை,
வண்ணைநகர்.

"சைவக்குருக்களின் விடையும். சமயதீட்சைக்குத் தடையும்."

சகோதரர்காள்!

இற்றைக்குச்சில மாதங்கட்குமுன் வெளிவந்த இந்துசாதனம் தமிழ்ப்பிரசுரத்தில், "சமயதீட்சைபெறுதவர் சைவரோ?" என்னும் மகுடநாமமிட்டெழுதிய விஷயத்தைக் கண்ணுற்று அவரது சமயாபிமானத்தைதெச்சி அகமகிழ்ந்தோம். ஆனால் சமய பரிபாலன நிமித்தம் பட்டம் பெற்றுள்ள எமது குருமாரின் காசாசையை உற்றுநோக்க விசனிக்காது விடக்கூடவில்லை. தனித்து ஒருவர் சென்று தீட்சை பெற விரும்பினால் 10 முதல் 15 ரூபா வரையில் தட்சணை தரவேண்டுமாம். அதனிற் குறைந்த தட்சணை செலுத்துவதாயின் 10 12 பேர் கூடிவரவேண்டுமாம். இதில் எது சாத்தியம்? எது அசாத்தியம்? வதிவுள்ளோர் கூடிய தொகையீந்து தனித்துப் பெறுதலும் அசாத்தியம்; இரண்டாவது, தீட்சை பெறும் அவா சற்றுமில்லாரை அழைத்துச் சேர்ப்பதுங் காலபேதத்தினால் அசாத்தியமாகும் செல்வந்தர் தாம் எளிதிற் பெறக்கூடுமெனினும், ஏத்திய தரித்திரத்திலாழ்ந்துள்ளோர் நிலை யென்னே? தொகையான பணஞ் செலுத்தித்தீட்சைபெற அவர்களால் இயலுமா? அவ்வறுமையைநோக்கில்கைகைவிடல் தீட்சைபெறுதவருஞ் சைவரோ? என்னுங் கேள்வி எழும். என செய்வது? குருக்களுபப்படி; அறமையுமிப்படி.

அந்நியமதக்குருமார் தம்மதத்தினர்உபதேசம் பெற எப்போவருவரென்று ஆவலாய் எதிர்பார்த்திருக்கின்றனர்; தம்மை யணுகிய எவரையுங் கைவிடாது வேதவசனங்களைச் சொல்லி அவாக்கொள்ளுகின்றனர்; பெரும்பாலும் தரித்திரருக்கே வேண்டிய அநுகூலத்தைச் செய்கிறார்கள்; அவர்களது மதாபிமானத்தின் சிறந்த ஊக்கத்தினாலேயே வருடத்திற்கு வருடம் பல குட்டிக்கோயில்களும் பாடசாலைகளும் பெருகிவருகின்றன. சைவசமயம் நாளுக்குநாள் க்ஷீணித்தும் பிறமதம் பெருகியும் வருதற்குக்காரணமென்னை? ஆசைமிகுந்த ஆசாரியர் தரித்திரரை ஆதரித்து ஆசமனிக்கத்தலைதூட்டாததே. நிற்க, சமய தீட்சைக்கே இத்தொகை தட்சணையாயின் இது வொழிந்த ஏனைய விசேஷ தீட்சைகளுக்கு எத்தொகையாமோ யார் அறிவர்? தீட்சைக்குச்சட்டங்கள் செலுத்துவதற்கு விதியுண்டாமாயினும் ஏழைகள் பொருட்டாயினும் சற்று ஏறத்தாழ வருவித்து அனுக்கிரகஞ் செய்தாலன்றோ செந்தண்மையுடையதந்தணருக்கழகு தரும்? அஃதின்றிப்பணத்திற்கண்ணுயிருந்துபக்குவிகளைநரகத்தில்வீழ்த்துவது நன்கல்லவே. ஆகையால் இனிமேலும் சைவக்குருமார் சுயநலம் விட்டுப் பொதுநலத்திற்றலையிடுதற்குப் புறப்படுவார்களாக.

'அந்தணரென் போரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்'
(திருவள்ளுவர்)

ஆ. மகாலிங்கம்,
மானிப்பாய்.

டக்டர் ரவீந்திரநாத்தாகூரின் கருத்து.

கவிஞரைக்கண்டு, அவர் தற்போது எங்கு பயணமாயிருக்கிறாரென்றும், எப்பொழுது திரும்பிவருவாரென்றும் கேட்டதற்கு, அவர் முதலில் ஸ்பெயினுக்குப் போவதாயும், அதன் பின் தென் அமெரிக்காவிலுள்ள பெரு நாட்டிற்குச் செல்லுவதாயும் தெரிவித்தார். அங்கிருந்து திரும்பிவர இன்னும் ஒருவருடமாவது செல்லுமாம். காந்தியடிகளின் உண்ணுவிரதத்தைப்பற்றி கவிஞரின் கருத்து என்னவென வினவியதற்கு, தமக்குஉபவாசத்தில்நம்பிக்கையில்லையென்றும், ஆனால் மகாத்மா காந்தி யாவரும் அறிந்தபடி உண்ணுமையாளரென்றும், அவரின் ஒரே நோக்கம், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஒற்றுமை யேற்படுத்தவேண்டுமென்பதே யென்றும், ஆனால் அவ்வொற்றுமை ஒருநாளில் ஏற்படப்போவதில்லை யென்றும், அதன் பயனுய் ஒருவரை யொருவர் குத்திக் கொண்டு சாகிறார்களென்றும், ஆனால் நாம் இரு சமூகத்தினரில் இன்னவர்தான் குற்றவாளியெனக் கூறவில்லையென்றும், இருஜாதியினரும்கஞ்சுண்டிருக்கிறார்களென்றும், அசங்சானது, தனதுவிஷத்தன்மையில் அபிவிருத்தியடைந்துவருகிறதென்றும், தற்போது ஏற்பட்டிருக்கும் இந்து முஸ்லீம் கலவரத்திற்குக் காரணம் கிலாபத்தே யென்றும், இந்தியா கிலாபத் விஷயமாய் வேலைசெய்யுங் காலத்துத் தாம் தீர்க்கதரிசனஞ்சொல்லியதுபோல, இக் கிலாபத் இயக்கமே இந்தியாவில் இவ்விரு இனத்தவர்களுக்குள்ளும் பெரும் பழிக்குக் காரணமாயிருக்குமென்றும், தமது தீர்க்கதரிசனம் சரியாய் நிறைவேறியிருக்கிறதென்றும் சொல்லி விட்டுத் "தொடர்ந்தாவது, இந்தியா கிலாபத் விஷயமாய் எதிலும் தலையிடக்கூடாது. நான் [illegible] எச்சரித்தும், எனதுவார்த்தைக்குச் செவிசாய்த்தார்களில்லை. மேலும் இந்தக்கலகம் குடிகொண்டிருக்கும் நஞ்சுத் தன்மையானது, முஸ்லீம்களை மாத்திரம் தாக்குவதாயில்லை. இந்து சமூகத்தினுள்ளுக்குத்தானே தாக்கி வருகின்றது" என்றார்.

"தாங்கள் தங்கள்பிரயாணம்முடிந்து இந்தியாவிற்கு வந்த பின்னராவது, இந்து முஸ்லீம் விஷயத்தில் தலையிடுவீர்களா?"

"நான் ஒரு கவிஞர். எனக்கும் அதற்கும் ஒரு சம்பந்தமும் இருப்பதாய்த் தெரியவில்லை. மேலும் எனக்கு அதில் ஏதேனும் சிரத்தையும் கிடையாது" —தேசபக்தன்.

விற்பனவு விளம்பரம்.

30 வேப்ப மரங்கள். அனுராசபுரப் புகைரதஸ்தானத்துக்குச் சமீபமாயுள்ளன. விபரம் அறியவிரும்புவோர் பின்வரும் காட்டப்படும் விலாசத்திற்கு எழுதி அறிந்து கொள்ளவும்.

காயுடுருலா
% டபிள்யு. தென்னக்கோன்
மிஷிக்கல்த் தெரு
அனுராசபுரம்.

(Mis. 537)

நம் தாய்நாடு எப்போது க்ஷேமமுறும்?

(முற்றொடர்.)

1. ஒரு நாட்டிலுள்ள ஜனங்கள் முன்னேற்றமடையவேண்டுமாயின், அல்லது சிலர் ஒன்றுகூடி ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவேண்டுமாயின், முதலாவது ஒற்றுமைவேண்டும். ஒற்றுமை அத்தியாவசியம் வேண்டும். அதாவது பொதுவானகாரியம் கைகூடுவதற்குச் செய்யும் முயற்சியில் நமக்குள்ளிருக்கும் சில்லறைப் பேதங்களையும், சச்சரவுகளையும், ஜாதி மத வித்தியாசங்களையும் சற்றும் கவனிக்காது, நாம் அனைவரும் பாரதமாதாவின் மக்களென்ற திடஎண்ணங்கொண்டு, யாவரும் ஒரே மனதாயிருந்து வேலைசெய்யவேண்டும். அத்தகைய ஒற்றுமை நம்மிடம் மிகக்குறைவு. அதற்கு மாறாக மத விஷயத்திலும் ஜாதி விஷயத்திலும், அபிப்பிராய பேதங்களாலும் பலமாய்க் கட்சிப் பிரிவுகளை வளர்த்துக்கொண்டு அப்பிரிவினையால் ஒருவர்க்கொருவர் துவேஷங்கொண்டு, அத்துவேஷம் பொதுநலத்திற்கு இடையூறு செய்யுமாறு நடந்துகொள்கிறோம்.

2. நம்மவரிற் பெரும்பாலார் சுயநலத்தில் நாட்டம்வைத்துத் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கு இடையூறுசெய்கிறார்கள். தங்கள் செல்வாக்குக் குறையுமென்பதற்காக நாம் முன்னேற்றமடைவதைத் தந்திரமாய்த்தடுக்க முயல்வோருக்கு இச்சுயநலப் புலிகள் உதவி செய்து தாய்நாட்டிற்குத் தீங்கிழைக்கிறார்கள். தாய் நாட்டிற்காகப் பாடுபடப் போகிறேன் என்று முன்வருவோரே, நகரசங்கம், மந்திராலோசனைச்சபை முதலியவற்றில் அவயவிகளாய்ச் சென்றபின், அப்பயங்கிய சுயநலத்திற்கு ஆசைவைத்துத் தங்கள் நாட்டார்க்களித்த வாக்குத்தத்தத்தைத் யலட்சியம்செய்து, எதிரிகள் பட்சம் சேர்ந்துகொண்டு தாய்நாட்டிற்கு இடையூறே செய்யத் துணிந்துவிடுகிறார்கள்.

3. விவசாயிகளுக்குத் தேசபக்தியே யின்னதென்று தெரியாது. நம் தாய்நாடு க்ஷேமமடைவதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்கிற உணர்ச்சியே யவர்களுக்கில்லை. நம் நாட்டாருக்கு உணவு முதலியவைகளுக்கு அவசியமான தானியங்களையே நாம் முன்னே பயிர் செய்யவேண்டும் எனகிற அறிவுகூட இன்றி, மேல்நாட்டு வர்த்தகர் மூலமாய் கையில் ரொக்கப் பணம் கிடைப்பதற்கு ஆசை வைத்து, மேல்நாட்டிற் சேற்றுமதியாகும் நிலக்கடலை, அவுரி, சணல் முதலியவற்றையே விசேஷமாய்ப்பயிர்செய்கிறார்கள். சிலர் சுயநலங்கருதுவதால் நாட்டிற்கே கேடுவிளைகிறது. இவர்கள் நாம் அற்பபணத்தை இச்சித்து நாட்டிற்குத் துன்பம் விளைவிக்கிறோம் என்று கருதுகிறார்களில்லை. ஏனெனில் அது அவர்கள் புத்தியிற் படவில்லை. அத்தகைய விஷயத்தையவர்களுக்கு எடுத்துக்காட்ட முயல்வோரையும் காணகிலம்.

4. இன்னொரு விஷயமிருக்கிறது. இது யாவற்றினும் மகாகொடிது. இதனால் உண்டாகும் தீங்குக்களவேயில்லை. இது இன்னும் வளர்ந்து கொண்டே போகும்படி விடப்பட்டால், முடிவில் உலகில் இந்துக்களென்ற ஒரு ஜாதியே யில்லாமல்போய்விடும். நமது மதமும் போய்விடும். இதுதான் மேல்நாட்டு நாகரிக மயக்கம். இதனால் நம்மவர், கண்மூடித்தனமாய் மேல்நாட்டு ஆசாரம் எதுவாயினும் சரி அதைப்பின்பற்ற ஆசைப்படுகிறார்கள். எந்தப் பொருளாயினும் மேல்நாட்டு வெளித்தளுக்குடையதையே விரும்புகிறார்கள். இவர்கள் இப்படிச்செய்வதால் நம் நாட்டுக் கைத்தொழில் மங்கிப்போகிறது. வீண்செலவும் ஏற்பட்டுவிடுகிறது. ஆசாரம் குன்றிப் போகிறது. நமது முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ள ஒவ்வொரு ஆசார விதியும் மதசம்பந்தமானதும் சுகாதார முதலிய சாஸ்திரங்களை யனுசரித்ததுமாகவே யிருக்கிறது. அப்படியிருக்க அவற்றை யலட்சியம்செய்வதால் நாம் ஒருபோதும் நன்மையுறமாட்டோம். இது காறும் நமது ஆடவர்களிற் பலர் இந்த நாகரிக மயக்கிற் சிக்கி யுழன்றாலும் இன்னும் தெய்வ சித்தமே அடியோடு நீங்காமலும் நம்தேசாசார மதாசாரங்கள் முற்றும் ஒழிந்துபோகாமலுமே யிருக்கின்றன. அப்படியிருப்பதற்குக்காரணம் நம் பெண்மணிகள் அவற்றைப்பாதுகாத்து வருவதேயாகும். அவர்களை யந்த அன்னியநாட்டு

ஆசாரங்களில் பழகும்படிவிட்டுவிடின் சீக்கிரத்தில் ஹிந்துக்கள் எனப்படும் ஜாதிசமயம் என்பதும் அடியோடு இல்லாமற்போம்.

5. நாம் கெடுவதன்றி நமது மக்களையும் அந்த ஆசாரத்திற் பழகவிட்டுக் கெடுக்கிறோம். தற்காலமாணவர்களின நிலைமையையும் அவர்களின் கல்விமுறையையும் கவனித்துப்பார்த்தால் அப் பயங்கரமான உண்மை பிரத்தியட்சமாய் விளங்கக்காணலாம். நேயர்களே! இக்குறைகளை யெல்லாம் நாம் நீக்கினாலன்றி நம்நாடு முன்னேற்றமடைவது மிக அரிதே. இக்குறைகள் எப்படி நீங்கும்?

(1) நம்மவர் கௌரவம், கீர்த்தி, பட்டம் முதலிய அயல இச்சைகளை யறவே விட்டுவிட வேண்டும். தாய்நாட்டின் க்ஷேமத்தைப்பற்றிய பொதுநலகாரியங்களைச் செய்யவேண்டியிருக்கையில் நமக்குள் இருக்கும் ஜாதிபேதம், மதபேதம், சில்லறைச்சச்சரவு, கட்சிபேதம் முதலிய யாவற்றையும் ஒருபுறம் கட்டிவைத்துவிட்டு, யாவரும் பாரதமாதாவின் மக்களாகிய சகோதரர், நாம் செய்யவேண்டிய காரியம் தாய்நாட்டின் காரியம் என்ற ஒரே எண்ணத்தோடு, மனமொருமித்து வேலைசெய்யவேண்டும். ஒரு ஸ்தானத்திற்குத் தகுதியுடைய ஒருவர் அபேக்ஷகராக நிற்கும்போது, மற்றொருவர் கௌரவம், சுயநலம், கட்சிபேதம் இவற்றைக் கருதி அதற்குப் போட்டி போடலாகாது.

(2) நம் நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களில் நமக்கு அவசியமான தானியவகைகள், பருத்தி முதலியவற்றை அன்னியநாடுகளுக்கு அனுப்பலாகாது. நமக்கு வேண்டிய அளவு இயற்கைப் பொருள்களை நாட்டிலேயே வைத்துக்கொண்டு நமக்கு அவசியமான பொருள்களைச் செய்துகொள்ளவேண்டும். நாம் உண்ணும் அரிசி கோதுமை முதலியவற்றை மேல்நாட்டிற்கனுப்பிவிட்டால் அவை சாராயமாகவும் வேறு உணவுப்பொருள்களாகவும் மாறி இங்குவந்து நமக்கே பெருங்கெடுதி விளைவிக்கின்றன.

(3) கிராமவாசிகளுக்கு மேற்கண்ட விஷயம் நன்கு விளங்கும்படி போதிப்பதோடு, நம் நாடு எத்தகைய நிலைமையிலிருக்கிறதென்பதையும், அது முன்னேற்றமடைவதற்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமைகள் இன்னவையென்பதையும் அவர்களறியுமாறு செய்யவேண்டும். நமது நாட்டு விவசாயிகளுக்கு இப்போது 'நாம் நம் தாய்நாட்டின் க்ஷேமத்தைக் கவனிக்க வேண்டும்' என்ற உணர்ச்சியே கிடையாது. அவர்களுக்கு அவ்வுணர்ச்சி யுண்டாகும்படி செய்யவேண்டும்.

(4) மேல்நாட்டு நாகரிகத்தில் நம்மவர்க்கிருக்கும் மயக்கம் ஒழியவேண்டும். எல்லாவற்றிற்கும் வெளித்தளுக்கைக்கண்டு மயங்கி அன்னிய நாட்டுச் சாமான்களையே வாங்குவதையொழித்து, நமது நாட்டில் செய்யப்பட்டவை நாணயக்குறைவாய்த் தோன்றினும் அவற்றையே வாங்கவேண்டும் என்ற அபிமானமுண்டாகவேண்டும். மேல்நாட்டாரிடம் இக்குணம் காணலாம். மேல்நாட்டாருக்குள்ள இத்தகைய நற்குணங்களை நம்மவர் பின்பற்றுவதைவிட்டு, நமக்குச் சற்றும் தகாத அவர்கள் ஆசாரங்களை மட்டும் கைக்கொள்வது மூடத்தனமல்லவோ.

(5) மிக முக்கியமான இன்னொரு விஷயமிருக்கிறது. நமது ஆண்மக்களை முன்னே சீர்திருத்தஞ் செய்யவேண்டும். இப்போதுள்ள நமது மாணவர்களின் நிலைமையைக் கவனித்துப் பார்த்தால், இது எவ்வளவு அவசியமென்பது விளங்கும். மாணவர்களின ஆசார ஒழுக்கம் நடவடிக்கைகள் மிக்க சீர்கேடடைந்துவருகின்றன. 'ஓதலிற் சிறந்தன் றொழுக்கமுடைமை' என்று நம் மூதாட்டியார் கூறிய வாக்கைக் கவனிப்பாரில்லை.

(1) இக்கால மாணவர்களுக்கு உபாத்தியாயரிடம் பக்தி கிடையாது. ஆங்கிலமே ஆரம்பத்திற் கற்பிக்கப்படுவதாலும், தாய்ப்பாஷை யலட்சியமாகக் கருதப்படுவதாலும அவர்களுக்கு நமது ஆசாரத்தின் உயர்வு தெரியாமற்போகிறது. இத்தோடு அன்னியருடைய தகாத ஆசாரத்தின் வாசனையே யேறுகிறது. இதனால் ஈசுர சிந்தனையும் நம் ஆசாரமும் அவர்களிடம் குன்றிப்போகின்றன.

(2) மாணவர்கள் ஆரம்பத்திலேயே கண்ணாடி போட்டுக்கொள்வது, சிகரெட் பீடி பிடிப்பது, சீட்டாடுவது என்பனவற்றிற் பழகிவிடுகிறார்கள். பெரியோரிடம் வணக்க ஒடுக்கம் கிடையாது.

(3) பாடசாலையில் இவர்களது ஒழுக்கம் நடக்கைகள் சற்றும் கவனிக்கப்படுவதில்லை. மேல்வகுப்புகளில் ஏறஏற அவர்களிடம் மேல்நாட்டு ஆசாரங்கள் விர்த்தியடைவதே பிரத்தியட்சமான பயனாயிருக்கிறது.

(4) இவர்கள் கற்குங்கல்வியோ இம்பரம் இரண்டில் ஒன்றுக்கேனும் பயன்படாத கல்வியே. அது, பிற்காலத்தில் இவர்கள் துரைத்தனத்தாரிடம் அல்லது மேல்நாட்டு வர்த்தகர்களிடம் அடிமைத்தொழில் செய்வதற்கே பயன்படக்கூடியது. பிற்காலத்தில் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைக்கவேண்டியவர்கள், நம் முன்னோரின் கீர்த்தியைக் காப்பாற்றி, தாய்நாடு பூர்வநிலைமையை யடையும்படி செய்யும் பொறுப்பை யேற்றுக்கொள்ள வேண்டியவர்கள் இம்மாதிரி வழியில் விடப் பட்டிருந்தால், இப்போது தாய்நாட்டிற்காக ஆன்றோர் படும் பாடெல்லாம் என்ன பயனைத் தரும்? ஒரு விருக்ஷத்தின் வேரைப் புழுக்கள் அரித்துக் கொண்டிருக்க, நாம் இலைகளுக்கு நீர் தெளித்துக்கொண்டிருப்பது போலாகுமேயன்றி வேறில்லை.

மாணவர்கள் நிலைமையுடனே சீர்திருத்தப்படவேண்டும் அவர்களுடைய ஆசாரஒழுக்கங்கள் பெற்றோராலும் உபாத்தியாயர்களாலும் கவனிக்கப்படவேண்டும். அவர்கள் கல்விமுறை திருத்தப்படவேண்டும்; தாய்ப்பாஷைக் கல்வியே முதலளிக்கப்படவேண்டும். ஈசுர பக்தி, தேசபக்தி, தன்மதிப்பு முதலியவற்றை யூட்டும் கல்வியே அவர்களுக் களிக்கப்படவேண்டும். கைத்தொழிலும் கிருஷிசாஸ்திரமும் எல்லாப் பாடசாலைகளிலும் போதிக்கப்பட வேண்டும். பிற்காலத்தில் உலகவாழ்க்கையில் அவர்களுக்கும் தேசத்திற்கும் பயனளிக்கத்தக்க கல்வியே கற்பிக்கப்படவேண்டும். நம் பூர்வீக உன்னத நிலைமையும், நம் நாகரிகம், முன்னோரின் வீரம், ஞானம், தெய்வ பக்தி, ஆசார ஒழுக்கங்கள் இவற்றின மேன்மையையும் அவர்கள் உணருமாறு செய்யவேண்டும். அப்போதுதான் அந்த நிலையை நாம் அடையவேண்டுமென்ற ஊக்கம் அவர்களுக்குண்டாகும்.

கல்விகற்றபின், அடிமைத்தொழில் செய்வது மிக்க இழிவென்றும், விவசாயம் வர்த்தகம் கைத்தொழில் இவற்றைச் செய்வதே கௌரவமென்றும், அப்படிச் செய்தாற்றான் நாம் செல்வமும் கௌரவமும் பெறுவோம், நம் தாய்நாடும முன்னேற்றமடையுமென்றும் நம்மக்கள் நன்கு உணர்ந்து அவ்வழியி லொழுகும்படி செய்யவேண்டும். நம் பூர்வ முறைப்படி நம்மக்கள் தேகப்பயிற்சி யடையும்படி செய்யவேண்டும். இது அவர்களின் சுகசீவியத்திற்கு மிக்க அவசியமானது. பெற்றோர் இவற்றையெல்லாம் கவனிக்காமல் தம் மக்களை ஆங்கில பாடசாலைக் கனுப்புவதோடு தமது கடமையொழிந்ததென்று கருதியிருந்தால் நம்நாடு ஒருபோதும் க்ஷேமமடையாது. அதற்குப் பதிலாக நமது ஆசாரம், மதம், நாம் ஒருசாதியார் என்ற யாவும் மறைந்துபோய் நாம் சாதி குலம் இல்லாத அடிமை வகுப்பில் சேர்க்கப்படுவோம். அப்படி நேர்வதை விட இப்பாரததேசமே கடலில் மறைந்துபோவது நலம்.

"மானம் படவரின் வாழாமை முன்னினிதே."

அநாதிகாலந்தொட்டு நமது புண்ணிய பூமிக்குப் பெருமையும் புகழும் அளித்துவரும் சச்சிதானந்தப் பெருங்கலையாம் பரம்பொருள்தான் நமக்கு அருள் புரியவேண்டும். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்."

—"ஆனந்தபோதினி."

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித, கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலக்குடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைரூத்தலுக்கு ரூபா 40. கால் ரூத்தலுக்கு ரூபா ௫ தாபற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினை முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
பட்டிக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.
25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டு மருந்துக்கண்காக்ஷியில் பஸ்ட்கிளாஸ் (முதல்தர) தேவஒளஷதங்களைத் தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்றது

உலகம் புகழ்வது.

AWARDED 1st CLASS GOLD MEDAL TO C. MALAYAPPA SAMI PILLAI PALNI
BY S. I. TAMIL MEDICAL CONFERENCE AND EXHIBITION HELD IN MADRAS 1923

உள்ளநாளும் மறவாதது.

சூலை, குஷ்டம், ரணம், பத்து முதலிய சகல வியாதிக்குங் கைகண்டது.

குரு தாம்பர பஸ்பம்.

முப்புவினால் தனுக்கற நீற்றியது. களிம்பற்றது. வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும செய்யாதது; பததியமிலலை. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். மறுமுறை வியாதி திரும்பிவராது. இது சகல வியாதிகளையும் வேரற நீக்கும் சக்தி வாய்ந்தது.

சூலை, குஷ்டம், திமிர், ரணம், மதமதப்பு, தடிப்புக்கள், கிரந்திகள், பத்துக்கள், கைகால ரணங்கள், குன்மம், மேகம், பவுந்திரம், கண்டமாலை,
சூலைநீர், முதலிய சகல கர்மவியாதிகளும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

குறைநோய் சம்பந்த வியாதிகள், விரல்கள் அழுகிப்போயிருந்தாலும் சரி, அம்மட்டில ஆறிவிடும். இது குஷ்டம, கருமேகம், வெண்மேகம், செம்மேகம் முதலியவைகளுக்கு மகா அருமையானது. இதுபோன்ற மருந்து எங்கும் கிடைப்பதரிது.

80 வேளை மருந்து ரூ. 40. 40 வேளை மருந்து ரூ. 20. 20 வேளை மருந்து ரூ. 10.
ஏழைகளுக்குப் பாதி விலை. பிரபுக்களுக்கு விலை வேறு. வி. பி. சார்ஸ் பிரத்தியேகம்.

நற்சாட்சி:—தேகமெல்லாமிருந்த மேகப் பத்துகள் இருந்த இடந் தெரியாமல் மறைந்துவிட்டன. கை, கால் விரல்களி லிருந்த ஆறாத மேக ரணங்கள் பூரா ஆறிவிட்டன. முக வசீகரமும் பசியும் உண்டாயிருக்கின்றன. K. பழனியாண்டிபிள்ளை, செருத்தூர், லால்குடி, திருச்சி.

☞ வீரியவிர்த்திக்கு நிகரற்ற

மன்மத கோலாகல குளிகை.

அபூர்வ சக்தி வாய்ந்தது!! ஆச்சரியமான குணமுள்ளது!!

புதிய நலத்தைக் காட்டும் போன பலத்தை மீட்கும்
ஒரு முறை பரீக்ஷிக்கவும்!! அதை இன்றே பார்க்கவும்!!

வீரியவிர்த்திக்கு இது நிகரற்றது. இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, போகசக்திக்குறைவு முதலியவைகள் நீங்கி நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி உண்டாகும். வீரியக்கட்டும், இழந்த பலமும், ஆண்மையுந் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஒளஷதமில்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

120 குளிகை ரூ. 10. 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2.
வி. பி. சார்ஜ் வேறு.

திருச்சி கா. பி. மு. இப்ராம்ஸா 3-I-23-ல் எழுதுகிறார்:

தங்கள் மன்மதகோலாகல குளிகையைச் சாப்பிட்டதில் ரத்தத்தை சுத்திசெய்து நரம்புத்தளர்ச்சியை நீக்கி நல்ல பலத்தையும் வீரிய விருத்தியையும் கொடுத்து உற்சாகத்தையும் இன்பத்தையும் தருகிறது. இன்னும் 3-ரூபாய் குளிகை வி. பி. யில் அனுப்பவும்.

சித்த ஆயுர்வேத டாக்டர்
C. மலையப்பசாமி பிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

(Q. (A) 46)

பித்தளை விளையாட்டுச் சாமான்கள்.

அழகும், பளபளப்பும் உள்ளது. இந்துக்கள் வீட்டில் சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 விதசாமான்கள் அடங்கியுள்ளன-

1 நெ ஜோடிப்பு 1க்கு ரூபா 4 அணா 8
2 நெ ,, ,, ரூபா 3 அணா 4
3 நெ ,, ,, ரூபா 2 அணா 8

கே. எஸ். முத்தையா ஸ்ரீ கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

புதிய சரக்கு. சரச விற்பனை.

தங்கமெடல்கள் பெற்ற இந்திய ஜவுளி வியாபாரிகள்.

எங்களிடம் மதுரை, காரைக்குடி, பனாரஸ், பெங்களூர், கொர்நாடு, கும்பகோணம், காஞ்சீபுரம், சேலம் இன்னுமநேகவூர் ஜவுளித்தினுசுகள் பட்டு ஜரிகைகலந்ததும், சாதாநூல்கலந்ததுமான சேலைகளும், 12 முழம் தாவணிப் பாவாடை, ரவிக்கைகளும், கல்கத்தா நார்மடிசைகளும், வேஷ்டிகளும், புதுச்சேரி சேலை, தாவணி, துண்டுகளும், 150×200-ம் நம்பர் நூல்களில் வெள்ளை, பலகலர்களில் ஜரிகை கலந்த சேலைகளும், 12 முழம் தாவணிகளும், 6 முழம் துப்பட்டா (சால்வை) (6-7-8 10×6) முழம் மடிகளும் ஏராளமாய் இருக்கின்றன. ஒருதடவை ஆடர்கொடுத்தால் நயம் தெரியவரும்.

வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலம் அனுப்பப்படும்.

டி. ரெங்கசாமி அய்யர் அன்சன்ஸ்,
ஜவுளிவியாபாரிகள்,
கீழ்வெளி வீதி, மதுரை.

கிளைகள்:—மேலகோபுர வாசல், மதுரை.
16 A. அய்யாபிள்ளை தெரு, P. T,
சென்னைபட்டினம்.

(ஜவுளி விலை ஜாபிதா இனாமாய் அனுப்பபடும்.) (Q. 53)

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S Ampikaipagan. for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.